163

# இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை இணை ஆணையர், தஞ்சாவூர்

I.A.No. /2013
in
O.A.No.5/2007

சிங்காரவேலு ...மனுதாரர்/3ம் தரப்பினர்

எதிர்

ராமசாமி வேளாளர்
மற்றும் 5 நபர்கள் ..எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/
1ம் எதிர்மனுதாரர்

## மனுதாரர்/3ம் தரப்பினர் தாக்கல் செய்யும் அபிடவிட்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா, வெண்டக்கோட்டை கிராமம் மற்றும் அஞ்சல் என்ற முகவரியில் வசிக்கும் சின்னையா பிள்ளை வேளாளர் குமாரர் இந்தியன் இந்து, வயதுள்ள சிங்காரவேலு ஆகிய நான் உண்மையாகவும் சத்தியமாகவும் சொல்வது என்னவென்றால்,

1)நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். அசல் மனு எண்.5/2007 நான் தரப்பில் அல்ல. அசல் மனு எண் 5/2007 ல் சமூகம் நீதிமன்றத்தால் 08.02.2011 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து இந்து சமய அறநிலைய ஆணையரிடம் நான் மேல்முறையீடு செய்திருந்தேன். மேற்படி மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு மீண்டும் கீழமை நீதிமன்ற விசாரணைக்காக மீள்திறப்பு செய்யப்பட்டு என்னுடன் மேல்முறையீடு செய்து நடேசன் திருநீலகண்டன் ஆகிய மூன்று நபர்களையும் தரப்பினர்களாக சேர்த்து விசாரணை செய்யுமாறு உத்தரவு பகரப்பட்டு உள்ளது.

2) நான் தெரிவிப்பது என்னவென்றால், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வேண்டாக்கோட்டை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் ஆரம்பகாலத்தில் நான்கு கரைகள் கொண்ட அமைப்பாக தொடங்கப்பட்டது. மேற்படி நான்கு கரைகள் வெள்ளாளர்,

செட்டியார், முதலியார், கள்ளர் ஆகிய நான்கு சமூதாயத்தை சேர்ந்தவர்கள் மட்டும் கோவில் உற்சவங்கள் மற்றும் கிராம நிர்வாகத்தையும் நிர்வாக செய்து வருவதாக முடிவு செய்யப்பட்டது. மேற்படி நான்கு கரைகளில் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு கரையை சேர்ந்தவர்கள் நிர்வாகம் செய்து வரவேண்டுமென முடிவு செய்யப்பட்ட பின்னர் மேற்படி ஒப்பந்தத்தை உறுதி செய்வதற்காக 19.08.2011 தேதியில் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதப்பட்டது. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை வெள்ளாளர் இனத்தை சேர்ந்த 11 நபர்களும், செட்டியார் இனத்தை சேர்ந்த 5 நபர்களும், முதலியார் இனத்தை சேர்ந்த மூன்று நபர்களும், கள்ளர் இனத்தை சேர்ந்த இரண்டு நபர்களும், கோனார் இனத்தை சேர்ந்த ஒரு நபரும் இணைந்து செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தினர். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணப்படி முதல் கரையை சேர்ந்த கோவிந்தசாமி வேளாளர், ராஜப்பா வேளாளர் ஆகிய இருவரும், இரண்டாம் கரையை சேர்ந்த சொக்கலிங்க செட்டியாரும், மூன்றாவது கரையை சேர்ந்த கோவிந்தசாமி நாயக்கரும், நான்காவது கரையை சேர்ந்த ரெங்கசாமி முதலியாரும் ஆகிய ஐந்து நபர்களும் ஆண்டு ஒருவர் என நிர்வாகம் செய்வதாக முடிவு செய்யப்பட்டது. ஆனால் அதில் கரை தலைவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டதன் காரணமாக சுமார் 30 ஆண்டுகாலம் மேற்படி கோவிலில் எவ்வித திருவிழாவும் நடைபெறாமல் பூட்டுப்பட்டு விட்டது.

3)அதன் பின்னர் கிராமத்தை சேர்ந்தவர்கள் மீண்டும் கூடி மேற்படி கோவிலுக்கு திருவிழா நடத்துவதாக முடிவு செய்யப்பட்டு, வசதியின் அடிப்படையில் மேனிவரி வசூல் செய்து பெரியோர்களால் திருவாழ நடைபெற்றது. அவ்வாறு சில காலங்கள் தொடர்ந்து நடைபெற்றது. பின்னர் 1970 ம் ஆண்டு ஆரிஜன சமுதாயத்தினர் பிரச்சனையால் கிராமம் இரு பிரிவாக போனதால் கோவில் காரியங்கள் முற்றிலும் தடைபெற்றுவிட்டது. பின்னர் 1971-72 ம் ஆண்டு மேற்படி கோவில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்கு உட்படுத்தப்பட்டுவிட்டது. அதன்

165

பின்னர் 1973 ம் ஆண்டு, செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் கரையை சேர்ந்து தர்மராஜ் வேளாளர் மேற்படி கோவில் தங்களுக்கு உரிமையுடைது எனக்குறிப்பிட்டு, தனியார் கோவிலாக விளம்புகை செய்யுமாறு சமூகம் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். மேற்படி மனு முழுமையான விசாரணை செய்யப்பட்டு, தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது பின்னர் இந்துசமய அறிநிலைய ஆட்சித்துறையால் ஐந்து நபர்கள் கொண்ட குழு கோவிலை நிர்வாகம் செய்து வரவேண்டுமென தொடர்ந்து நான்கு முறை உத்தரவு பகரப்பட்டுவிட்டது. பின்னர் கடைசியாக நிர்வாகம் செய்து வந்த குழுவினர் சுமார் ரூ.40,00,000/- வரை நன்கொடை வசூல் செய்தும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையிடமும் கோவில் கட்டுவதற்கு தொகை வசூல் செய்தும் அனுமதி பெற்றும் புதிய கோவில் கட்டப்பட்டு குடமுழுக்கும் செய்யப்பட்டுவிட்டது. மேற்படி கோவிலை அறிநிலைய ஆட்சித்துறை மூலம் நியமனம் செய்யப்பட்ட குழுக்கள் ஒவ்வொரு ஆண்டும் முறையாக நிர்வாகம் செய்து திருவிழாக்களும் செய்து வந்தனர். இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் பொய்யான தகவலை குறிப்பிட்டு 1911 ம் ஆண்டு ஏற்பட்ட செட்டில்மெண்ட்படி ஐந்து குழுவினர் வாரிசுதாரர்கள் என குறிப்பிட்டு மனு தாக்கல் செய்தனர். மேற்படி எதிர்மனுதாரர்கள் தெரிவித்துள்ள வாரிசுதாரர்கள் பட்டியல் சரியானது அல்ல. மேலும் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே நான்கு கரையை சேர்ந்த நபர்கள் முறையாக நிர்வாகம் செய்யாததால், கோவில் பூட்டுப்பட்டுவிட்டது. அதன்பின்பு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை இணை ஆணையர் மூலம் ஐவர் கொண்ட குழுக்கள் நான்கு முறை அமைக்கப்பட்டு, மேற்படி குழுக்களை கொண்ட நபர்கள் முறையாக நிர்வாகம் செய்து வந்தனர். இந்த 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மேற்படி கோவிலின் நலனுக்கு விரோதமாக செயல்பட்டு வருகின்றினர். ஆதலால் மேற்படி அசல் மனுவில் என்னை எதிர்மனுதாரராக சேர்க்க வேண்டியது அவசியமும், நியாயமுமாக உள்ளது.

4)எனது இந்த மனுவை அனுமதிக்காவிட்டால் எனக்கு பெருத்த இழப்பும் மற்றும் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும்.

ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து என்னை மேற்படி அசல் மனு எண். 5/2007 ல் இரண்டாவது எதிர்மனுதாரராக சேர்க்க உத்தரவிட வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

என் முன்பாக சத்தியபிரமாணம்
செய்து கையெழுத்திடப்பட்டுள்ளத

வழக்கறிஞர்
23.7.13

மனுதாரர்

//உண்மை நகல்//

மேலாளர்
இணை ஆணையர் அலுவலகம்
தஞ்சாவூர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
இணை ஆணையர் முன்பு

IA /2013

in

OA 5/2007

மனுதார் / 3ம் [illegible]

[illegible]